அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
விகாரி ✪ ஆடி (ஜுலை – 2019) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்


1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் கௌசிகர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 30.10.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை திருவடி ஞானோபதேசம் பாகம் - 3** ........ 17
5. ஆனி மாத பௌர்ணமி விழா ........ 36
6. ஆடி மாத பௌர்ணமி விழா ........ 36
7. அன்பர்களின் அனுபவங்கள் ........ 37
8. மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூல் ........ 38
9. மகான் விசுவாமித்திரர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூல் ........ 41
10. மகான் அப்பூதியடிகள் நாயனார் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூல் ........ 44
11. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 47
12. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 57


ஓங்காரக்குடில் ஆசான்

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**

**ஆசிபெறும் நேரம்**

**தினசரி மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

அரசனே தருமனை கர்ணனை மிஞ்சிய
அறிவிப்பேன் சதுர்யுக காலத்துள்
அரசர்களே செய்திடா மாதருமம்
அளவிலா செய்து வரும் தேசிகனே
தேசிகனே உன் தருமம் வளர வளர
தெய்வநிலை கண்டது உன் அமுது
ஆசிபட தேவாமிர்தம் ஆனதப்பா
அணுகி எவர் ஞானிகள் பேர் சொல்லி
சொல்லி அமுது உண்கின்றாரோ
சுபிட்சம் வளம் ஆயுள் கீர்த்தி
வல்லமை கண்டிட நேருமப்பா
வரமென உன் குடிலை அணுகி

– மகான் கௌசிகர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 43 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

| | | |
|---|---|---|
| ஓம் | விசுவாமித்திரர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | வியாக்ரமர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | வியாசமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | விளையாட்டுச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | வேதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி 131 |

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.




அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# விகாரி வருடம் ஆடி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் கௌசிகர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : **99655 71837**

1. ஞானிகளை பூஜிக்கும் சன்மார்க்கம்
ஞான வரம் தரும் உன் மார்க்கம்
கனிகிரி வேலவன் செயலாக்கமாக
கலியுகம் தன்னில் சேவை ஆற்றி வர

2. வருகவே பல பிறவி செய்த பயன்
வடிவேலனால் ஈதூழ் தன்னில்
குரு அவதாரமாக நிலை பெற்று
குவலயம் காக்க அவதாரம் புரிந்த நல் அரங்கனே

3. அரங்கனே உன் சக்தியாகவும்
அறம் அருள் ஆற்றலாகவும் வரும்
வரங்கள் பெற்ற ஞானத்திருவடி நூலுக்கு
விகாரி ஆண்டு நள்ளி திங்களுக்கு ஆசி

4. ஆசிதனை கௌசிகர் யானுமுரைப்பேன்
ஆகாசம் பூலோகம் குளிர்விக்க
ஆசிபட அன்னதான சேவையை
அளவிலா செய்து வரம்பெற்ற அரசனே

5. அரசனே தருமனை கர்ணனை மிஞ்சிய
அறிவிப்பேன் சதுர்யுக காலத்துள்
அரசர்களே செய்திடா மாதருமம்
அளவிலா செய்து வரும் தேசிகனே

6. தேசிகனே உன் தருமம் வளர வளர
தெய்வநிலை கண்டது உன் அமுது
ஆசிபட தேவாமிர்தம் ஆனதப்பா
அணுகி எவர் ஞானிகள் பேர் சொல்லி

7. சொல்லி அமுது உண்கின்றாரோ
சுபிட்சம் வளம் ஆயுள் கீர்த்தி
வல்லமை கண்டிட நேருமப்பா
வரமென உன் குடிலை அணுகி

8. அணுகி தருமசிந்தை பெருக
அறத்தில் தொண்டு செய்து வர
அணுகி பொருளுதவி செய்திட
அணுகுபவர் அனைவருக்கும் ஞானிகள்

9. ஞானிகள் பாதுகாப்பு தந்தும்
ஞானவாழ்வுக்கு வர அருளுவரப்பா
துணிவுபட பல பிறவி செய்த
தீவினைகள் தொடர அல்லல்படும்

10. அல்லல்படும் அனைத்து மக்களும்
அரங்கனுடன் ஆறுமுகனார் நாமம்
மெல்ல செபதபம் செய்து வந்தாலே
முன் கருமவினை ஒழிந்து மீள்வரப்பா

11. அப்பனே இனி ஒருக்காலும்
ஆக்கினை தொடராத வாழ்வாய்
சுப்பன் தயவு ஆசிபட சிறப்பரப்பா
சுபபலன் புத்திர வரம் காணா

12. காணா கண்ணீர் மல்கி வாடி
கலியுகத்தில் விசனமுற்ற மக்களே
ஞானவான் குமரகிரி அமைத்து
ஞான பூசையோடு கோ பூசையாக நடத்தும்

13. நடத்தும் பூசை கலந்து ஆசி ஏற்று
நல்தருமம் கோவிற்கு ஈந்து
தடையற பூசை வழி ஆசி பெற
தருமமிட தடைகள் விலகி

14. விலகியே தடையிலா மணவாழ்வு
விருப்ப வழி வாரிசு சகல வளம்
ஞாலமதில் உலகோர் அடைவர்
ஞானிகளை வணங்க வகை செய்த

15. வகை செய்த அரங்க மகான்
வாழும் ஞானி எனக் கண்டு
மிகைபட தெளிந்து தொடரவே
மேன்மைகளும் பலவகையும் அடைவர்

16. அடையவே அரங்க ஞானி உபதேசம்
அறமாய் அருட்சுவடிகளாய் வர
தடையற கல்வி சிறார்களும்
தக்க நிலை பணி தேடும் அன்பர்களும்

17. அன்பர்களும் குருவாக வணங்கி
அரங்க மகானிடம் தீட்சை ஆசி பெற
இன்பமான உபதேசங்கள் ஏற்க
இணையிலா கல்வி கேள்வி திறன் பெருகி

18. பெருகியே சிறப்பு தேர்ச்சி காண்பர்
பேராசான் அருட்தயவை பெற்றவர்கள்
உறுதிபட உத்யோகம் திடப்பணி கண்டு
ஊழலில்லா சேவை ஆற்றி சிறப்பர்

19. சிறப்புதரும் உயர் பதவி ஆளுமை
சேவை வழி நற்பேரு புகழ்
மறுப்பிலா மக்கள் பதவிகள்
மாண்புடன் உலகோர் அடைய

20. அடையவே அரங்கன் காட்டும்
அறநெறி சுத்தநெறி முறையை
சோடை பற்றா வண்ணம் ஏற்று
சூட்சும தீட்சை பெற்றுத் தொடர

21. தொடரவே அரங்கன் சேவையில்
தொடர் பங்களிப்பு செய்து வருக
தடையிலா அரங்கமகான் ஆசி
தவபலமும் தருமபலமும் கூடியே

22. கூடியே வரும் மக்களுக்கு
குறையிலா சிற்றரசன் பதவி
நாடிடும் சௌகர்யம் பலவாற்
ஞானபலமும் கூடி துணை நிற்கும்

23. நிற்கவே நிலை பெற்ற ஞானி
ஞான சக்தியாக வருகின்ற
ஏற்றமிகு ஞானத்திருவடி நூலை
எல்லோரும் பெற்று வாசிக்க

24. வாசிக்க வணங்கி பூஜிக்க
வையகத்தில் ஞானவான்கள் நிலை
ஆசிபட பெருகி கலியுகமே
ஆறுமுக அரங்க ஞானி வழிகாட்டலில் ஞானயுகமாகும்
ஞானத்திருவடி நூலுக்கு கௌசிகரின் ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

விகாரி வருடம் ஆடி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் கௌசிகர் அருளிய ஆசி நூலின் சாரம் :

முற்றுப்பெற்ற ஞானிகளை பூஜிக்கும் சன்மார்க்கம் என அரங்க உமது மார்க்கம் ஞானவரம் தரும் அற்புத மார்க்கமாகும். கனிகிரி வேலனாம் முருகப்பெருமானின் செயலாக கலியுகத்தினில் தொண்டுகளைச் செய்து வர, அரங்கா தாம் பல பிறவிகளில் செய்த புண்ணிய பலத்தின் பயனால் தவபலத்தின் பயனால் முருகப்பெருமானின் கருணையால் இந்த பிறவியிலே சற்குருவாக குரு அவதாரமாக நிலை பெற்று இவ்வுலகை காத்திடவே அவதாரமாக அவதரித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது சக்தியாகவும், அறம் அருள் ஆற்றலாகவும் வருகின்ற வரம் பெற்ற ஞானத்திருவடி நூலிற்கு விகாரி ஆண்டு ஆடி மாத ஆசி நூல்தனை கௌசிகர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கௌசிகர்.

விண்ணையும் மண்ணையும் குளிர்விப்பதற்காக, உலக வெப்பத்தை தணிப்பதற்காகவும், மழை பொழிவதற்காகவும், அன்னதான தொண்டினை உலகமெலாம் அளவிலாது செய்து வரங்களைப் பெற்றிட்ட ஞானஅரசே! தருமனையும், கொடைக்கு பெயர்போன கர்ணனையும் மிஞ்சி தானதருமத்தினை இந்த நான்கு யுகத்திலும் இதுவரை எந்த அரசர்களும் செய்ய முடியாத அளவிற்கு அளவிலாது தர்மங்களை பிரம்மாண்டமாய் செய்து வருகின்ற ஞானதேசிகனே உமது தர்மம் வளர வளர உமது ஏழாம் படை வீட்டில் ஓங்காரக்குடிலில் சமைக்கப்படும் உணவானது ஞானிகளின் பார்வையால் அருளாசியால் தர்மபலத்தால் தெய்வீக நிலையை அடைந்து தேவாமிர்தமாக ஆனதப்பா.

உமது வல்லமைமிக்க ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி பயபக்தியுடன் ஞானிகளின் திருநாமங்களைச் சொல்லி குடில் உணவை யார் உண்கிறார்களோ, அவர்களுக்கு ஞானத்தலைவன் ஆசியாலும் ஞானிகள் ஆசியாலும் உமது அருளாலும் வாழ்வினில் சுபிட்சம் உண்டாகும், சர்வ வளம் பெருகும், நீடிய ஆயுளைப் பெறுவார்கள்.

உமது ஓங்காரக்குடிலினை நாடி வந்து மனம் உவந்து ஆங்கே நடக்கின்ற அன்னதான சேவைகளுக்கும் அறப்பணிகளுக்கும் பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் வருகின்றவர்களுக்கு ஞானிகள் அருள் பாதுகாப்பு

தருவார்களப்பா. ஞானிகளின் அருள் பாதுகாப்பை தந்து அவரெல்லாம் ஞானவழிக்கு வந்து வாழ்கின்ற வரமும் அருளும் பாதுகாப்பையும் ஞானிகள் தருவார்களப்பா.

பல பிறவிகளில் தெரிந்தோ தெரியாமலோ செய்திட்ட பாவங்களினால் கர்மவினை சூழ்ந்து கர்மவினையால் துன்பப்படுகின்ற மக்களெல்லாம் முருகப்பெருமானின் அவதாரமாகிய அரங்கமகா தேசிகரின் திருநாமங்களை மனம் உருகி ஜெபதபங்களை செய்து வந்தாலே போதும். அவர்கள் முன் ஜென்மங்களிலே செய்திட்ட கர்மவினைகள் எல்லாம் ஒழிந்து மீள்வார்களப்பா. அவர்களுக்கு துன்பம் இனி ஒருபோதும் தொடராத நல்வாழ்வைப் பெற்று, முருகப்பெருமானின் ஆசியுடன் சிறப்படைவார்கள்.

திருமணம் ஆகி பல வருடங்கள் ஆனபோதும் வீட்டினில் புத்திரபாக்கியம் இல்லாமல் கண்ணீர்விட்டு மனம் வாடி வதங்கி பரிதவிக்கும் மக்களே, நீங்கள் இனி கவலை கொள்ள வேண்டாம். கலியுகத்தில் துன்பப்படும் மக்களே உங்களது கவலைகளை போக்கி உங்களை காக்கவே விமோசன தலமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனார் குமரகிரி எனும் ஞானத்தலத்தினை அமைத்து ஆங்கே ஞானபூஜைகளை செய்வதுடன் தாய்க்கு ஒப்பான பசுக்களுக்கும் கோபூஜை செய்து மக்களின் வினைகளை போக்குகின்றார். ஆதலால் நீங்களெல்லாம் துன்பப்படுவோர் எல்லாம், குமரகிரியில் நடக்கின்ற கோபூஜையிலும், திருவிளக்கு பூஜையிலும் கலந்து ஞானிகளின் ஆசியோடு ஞானத்தலைவன் முருகப்பெருமானின் ஆசியையும், முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கரின் ஆசியையும் பெற்று வினைபோக்கும் வகையில் அங்குள்ள பசுக்களுக்கு உணவளித்து, பசுக்களுக்கு உணவளிக்க தர்மங்களை செய்து ஆசி பெற உங்களது தடைகள் எல்லாம் விலகிடும்.

திருமணத்தடை உள்ளவர்களும், புத்திரபாக்கியம் இல்லாதவர்களும் கோபூஜையில் கலந்து தருமமிட திருமணத்தடை நீங்கி, திருமணம் விரைந்து நடக்கும், புத்திரபாக்கிய தோஷம் நிவர்த்தியாகி புத்திரபாக்கியம் உண்டாகும். அவர்கள் சகலவளமும் பெற்று சிறப்படைவார்கள்.

ஞானிகளை வணங்கி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், பாவங்களை போக்கி புண்ணியங்களைச் செய்து மேன்மையடையவும் ஞானிகளின் அருளாசிகளையும் அருள் பாதுகாப்பையும் பெற்று நல்வாழ்வையும் ஞான வாழ்வையும் வாழ வழிவகை செய்திட்ட முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரே இக்கலியுகத்தின் வாழும் ஞானி என்பதையும் அவரே முருகப்பெருமானின் அவதாரம் என்பதையும் யுகமாற்றம் செய்திடவே அரங்கன் அவதரித்துள்ளார் என்பதையும் அறிந்து தெளிந்து அரங்கனே நம்மைக் காக்க வல்லவர், அரங்கர் திருவடியே ஞானம், அரங்கன் திருவடியை விட்டால் வேறு கதியில்லை, அரங்கரின் தூய நெறியைத் தவிர கடைத்தேறிட வேறு மார்க்கம் இல்லை என்பதையும் தெளிவாக உணர்ந்து, அரங்கரின் கொள்கைகளை ஏற்று பின் தொடர்ந்திட்டால் அவரெல்லாம் உலகினில் உள்ள எல்லா மேன்மைகளையும் பலவகையான சிறப்புகளையும் சீர்சிறப்பாய் பெற்று சுகவாழ்வு வாழ்வார்கள்.

உலகின் நலன் கருதியே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் உபதேசங்களும், அருள் உரைகளும் நூல் வாயிலாக வெளிவருகின்ற அறத்தின் தன்மைகள் தர்மத்தின் நெறி அனைத்தும் உபதேச அருட்சுவடிகளாக அறிவுரைகளாக வெளிவருகின்றன. ஆதலினாலே கல்வி கற்கின்றவர்களும், மாணவர்களும், பணி நிரந்தரம் தேடுபவர்களும், உத்தியோக உயர்வு வேண்டுபவர்களும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க எண்ணுபவர்களும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து தீட்சை உபதேசம் பெற்று பின்னர் அருட்சுவடிகளையும், அரங்கர் உபதேசங்களையும் ஏற்று கடைப்பிடித்திட கல்வியில் ஈடுஇணையிலா வழியில் தேர்ச்சி பெறுவார்கள், கல்விகேள்வி திறனில் மேல்நிலை பெறுவர். பேராசான் அரங்கரின் அருட்தயவை பெற்றவர்கள் உத்தியோக உயர்வையும் பணி நிரந்தரத்தையும் பெற்று சிறப்படைவார்கள். அவர்களது பணியில் நேர்மையுடன் நடந்து ஊழலில்லாது கடமையாற்றி பொதுநலத்தோடு பணி செய்வர். சிறப்புடன் செயலாற்றி உயர் பதவிகளை பெற்று ஆட்சி பொறுப்புகளிலும் அதிகாரங்களிலும் பங்குவகித்து அவர்களது சிறப்பான பொதுசேவைகளின் மூலமாக நற்பேரும், பெரும் புகழையும் அடைவர்.

அரசின் உயர்பதவிகளையும், ஆட்சி பொறுப்புகளிலும் நற்பேரு, புகழினையும், ஆட்சி அதிகாரத்திலும் பங்கு கொண்டு மாண்புமிக்க பதவிகளை பெற வேண்டினால் அவர்களெல்லாம் சர்வவல்லமையும் தந்து வரமருளும் தூயமார்க்கமான ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அறநெறியான உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவஉணவை மேற்கொண்டு, பிற உயிர்களுக்கு இரங்கி இதம் புரிந்து அன்பு செய்து வாழும் தூயநெறியினை கொள்கையாக ஏற்று அரங்கரின் திருவடி பணிந்து குருஉபதேசம் பெற்று குற்றமின்றி தவறாது கடைப்பிடித்து வருவதுடன் அரங்கரிடத்து சூட்சும தீட்சைகளை பெற்று அரங்கரின் கட்டளைப்படி பின்தொடர்ந்திட வேண்டும். ஆறுமுக அரங்கமகா தேசிகரின் சேவைகளில் அவரவரும் தொடர் பங்களிப்பை செய்து தருமம் வளர, பொருளுதவிகளைச் செய்து வருவதும், ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அருளாசிகளை பெற்று வர, தவபலமும் தருமபலமும் பெருகி அவர்களுக்கு குறையில்லாத சிற்றரசர் போன்ற பதவிகளும் அதிகாரங்களும் கிடைத்து சௌகரியமும் பலவிதமான ஞானபலமும் பெருகி அருள்பலம் துணையாய் நிற்கும்.

நிலைபெற்ற மகா ஞானி, மரணம் தவிர்த்த மகா ஞானி, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானசக்தியாக வருகின்ற ஏற்றம்மிகு ஞானநூலாம் ஞானத்திருவடி நூலை எல்லோரும் வாங்கி பயபக்தியுடன் பணிந்து வணங்கி வாசித்துவர, பூஜித்து படித்திட, உலகினில் அவர்கள் ஞானவான்களின் நிலையை அடைந்து உலகினில் ஞானிகளின் அருளாசிகள் பெருகி இந்த கலியுகமே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வழிகாட்டலில் கலியுகம் மாறி ஞானயுகமாக ஆகிடும் எனக் கூறுகிறார் மகான் கௌசிகர்.

–சுபம்–

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
திருச்சி மாவட்டம், துறையூர், ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
30.10.1988 அன்று அருளிய

# திருவடி ஞானோபதேசம் பாகம் – 3

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

**பண்ணப்பா வோராண்டு செய்தாயானால்**
**பராபரமே வுனக்குவந்து யேவல்செய்யும்**
**விண்ணப்பா வொருவருக்கும் மணிசொல்லாதே**
**வேதாந்த நரகத்தே கிடந்துமாய்வார்**
**கண்ணப்பா உனக்கேத்த பிள்ளையானால்**
**கைமுறையாய்ச் செய்துஅவன் குணத்தைப்பாரு**
**ஒண்ணப்பா கருவைத்தா னொளிக்கவில்லை**
**உற்றுணர்ந்து மனந்தேறிப் பாருபாரே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 6.**

**கண்ணப்பா உனக்கேத்த பிள்ளையானால் கைமுறையாய்ச் செய்துஅவன் குணத்தைப்பாரு –** தென்மண்டல தளபதி தட்சணாமூர்த்தியாகிய ஆசான் அகத்தீசர் அவர்கள் குருமுனி பட்டம் பெற்ற மாபெரும் யோகி. அவர் வகுத்துக் கொடுத்த ஞானபூஜா விதி பாடலுக்கு நாம் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த நூலை இகழ்ந்து பேசுபவர்களின் நிலையையும், புகழ்ந்து பேசுபவர்களின் நிலையையும் சொல்லிவிட்டோம். அதனால்தான் **உனக்கேத்த பிள்ளையானால்** சொல்ல வேண்டுமென்று சொல்கிறார். ஆகவே இந்தத் துறையை விரும்பாதவர்கள், வெறுக்கின்ற மக்கள், முரண்பட்டவர்கள் ஆகியோரிடம் சொல்லக் கூடாது. ஆசானை இகழ்ந்து பேசுகின்ற மக்களிடம் சொன்னால் அவன் **வேதாந்த நரகத்தே கிடந்துமாய்வார்** என்று சொல்கிறார்.

உண்மைப்பொருள் உணர்ந்து அன்போடு, பணிவோடு கேட்பவரிடம் ஆசான் பெருமைகளை சொல்ல வேண்டும் என்கிறார். உனக்கேத்த பிள்ளை என்று சொன்னதாலே, என்னதான் உணர்ச்சிவசப்பட்டு பேசினாலும், என்னதான் ஆசான் கோபத்திற்கு ஆட்பட்ட போதிலும், உற்ற சீடனாக இருந்து,

சாந்தமாகவும் தன்னடக்கத்தோடும் அன்போடும் மரியாதையோடும் இருக்கின்ற மக்களுக்கு இதை சொல்லலாம் என்று அவரே வகுத்துக் கொடுத்திருக்கிறார்.

**கண்ணப்பா உனக்கேத்த பிள்ளையானால் கைமுறையாய்ச் செய்துஅவன் குணத்தைப்பாரு** – கைமுறையாய் என்றால் தொடர் நிகழ்ச்சி என்று பெயர். கைமுறை என்பது கொள்கை, இதுபோன்ற ஒரு பாரம்பரியத்தோடு வருவது. அவனுடைய குணத்தைப் பார்த்து, நெறியை சொல்ல வேண்டும்.

முதலில் ஆசான் அகத்தீசரை அறிமுகப்படுத்தக் கூடாது, அவர் மாபெரும் யோகி, மிகப்பெரிய புண்ணியவான். கேட்பவர்கள் தகுதியுள்ள மக்களா என்பதை ஆராய்ந்து பார்த்து, மாபெரும் புண்ணியவான் ஆசான் அகத்தீசர் பெருமைகளை பேச வேண்டும். ஆசான் அகத்தீசர் பெருமையை எல்லோரிடமும் பேசக் கூடாது. முரண்பட்டவன் இதை கேட்டுவிட்டு, இகழ்ந்து பேசினால் அதன் விளைவு சொன்னவனைப் பாதிக்கும். அதனால்தான் **உனக்கேத்த பிள்ளையானால்** சொல் என்று சொல்கிறார். ஞானவான், பண்புள்ள பிள்ளைகளாக இருந்தால் அவனிடம் ஞானத்தை சொல் என்கிறார்.

**ஒண்ணப்பா கருவைத்தா னொளிக்கவில்லை உற்றுணர்ந்து மனந்தேறிப் பாருபாரே** – தெட்சணாமூர்த்தியாகிய குருமுனி பட்டம் பெற்ற ஆசான் அகத்தீசர் அவர்கள் அருளிய ஞானபூஜா விதி 10ல் ஞானத்தைப் பற்றி தெள்ளத்தெளிவாக சொல்லியிருக்கிறேன். அதில் நான் ஒன்று கூட ஒளிக்கவில்லை என்கிறார்.

**ஒண்ணப்பா கருவைத்தா னொளிக்கவில்லை** – கரு என்றால் மூலம் என்று பொருள்படும். ஞானத்திற்கு மூலமாகிய வேர், வித்து, அந்த நுட்பத்தை நான் விளக்கமாக சொல்லி இருக்கிறேன். அதுவும் மறைக்காமல் சொல்லி இருக்கிறேன். அதையும் **உனக்கேத்த பிள்ளையானால்** சொல் என்கிறார்.

**உற்றுணர்ந்து மனந்தேறிப் பாருபாரே** – உற்று என்றால் நோக்கி, ஆராய்தல், நாட்டம் கொள்ளுதல், உணர்தல், நாடுதல், விரும்புதல் என்று பொருள்படும். ஆராய்ந்து, நாடி, விரும்பி, தெளிந்து தேற வேண்டும் என்பது இதன் சாரம். இந்த பத்து பாடல்களில் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறேன். இதை உற்றுணர்ந்து தெளிவு பெற வேண்டும். இதே சிந்தனையாக இருந்து தெளிவைப் பெற்று, உனக்கேத்த பிள்ளையானால் உண்மை சீடனானால், அவனுக்கு இந்த இரகசியத்தை சொல் என்கிறார்.

**பாரப்பா யிதற்குக்கை லாசமுண்டாம்**
**பாரார்கள் சித்தரிதை மறைத்துப்போட்டார்**

**ஆரப்பா யெனைப்போலே திறந்துசொல்வார்**
**ஆச்சரிய மிதனுடைய வேகமப்பா**
**ஓரப்பா யிதனாலே யோகசித்தி**
**உத்தமனே சிவபூசை பண்ணநன்று**
**காரப்பா யிதுதனக்குப் பூசைசெய்துக்**
**கருவாக அர்ச்சனைசெய் பதங்கஞ்செய்யே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 7.**

**பாரப்பா யிதற்குக்கை லாசமுண்டாம் பாரார்கள் சித்தரிதை மறைத்துப்போட்டார் –** இந்தத் துறையில் கைலாசம் என்று சொல்லப்பட்ட மேலான வாழ்க்கை, மோட்ச லாபம் என்பது உண்டு. பல்வேறு பரிபாஷைகள் மூலமாக சொல்லியிருக்கிறாரே தவிர, நேருக்கு நேராக, எல்லோருக்கும் புரியக் கூடிய பாஷையில் யாரும் சொல்லவில்லை. இந்தத் துறையை பல்வேறு பரிபாஷைகளால் சித்தர்கள் மறைத்து விட்டார்கள். தெட்சணாமூர்த்தி என்று சொல்லப்பட்ட ஆசான் அகத்தீசர்தான் எல்லோருக்கும் புரியும்படி தெள்ளத்தெளிவாக சொல்லியிருக்கிறார்.

**ஆரப்பா யெனைப்போலே திறந்துசொல்வார் ஆச்சரிய மிதனுடைய வேகமப்பா –** இப்படி யாரும் திறந்து சொல்லமாட்டார்கள். அப்படி சொல்வதற்கும் அதிகாரம் கிடையாது. மறைத்து சொல்லியதை அறிந்து கொள்ள, உண்மை தெரிந்தவர்களால் மட்டுமே முடியும். இந்தத் துறையே சிக்கலாகவும், பரிபாஷையாகவும், யாராலும் புரிந்து கொள்ள முடியாததாகவும் உள்ளது. பரிபாஷைகளில் பாடுவதில் சித்தர்கள் மிகப்பெரிய கைகண்ட கலை உள்ளவர்கள்.

மகான் இராமதேவரும், மகான் கோரக்கரும் பரிபாஷைகளில் பாடுவதில் சிறந்த கைகண்ட கலை உள்ளவர்கள். இதுபோன்று யாரும் மறைக்க முடியாது. ஆனாலும் உண்மை தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். இப்படியெல்லாம் நானும் சொல்லியிருக்கிறேன், இருந்தாலும் நீ ஆசான் பாதத்தை பற்றினால், அவர் உனக்கு சொல்லித் தருவார். நானும் அப்படித்தான் மறைத்து சொல்லியிருக்கிறேன்.

ஆதி தலைவன் சுப்பிரமணியரே திகைக்கின்ற அளவிற்கு மகான் குமரகுரு மறைத்து பரிபாஷையில் பாடியுள்ளார். இப்படியெல்லாம் மறைத்து சொன்னாலும், நீங்களெல்லாம் பிழைத்துக் கொள்ளுங்கள் என்று நான் வெளிப்படையாக சொல்லி, நான் உங்களுக்கு நல்லது சொல்லியிருக்கிறேன் என்கிறார்.

மகான் இராமதேவரும், மகான் கோரக்கரும் தனது பாடலில் பரிபாஷையாக சொல்லியிருப்பார்கள். ஆனால் கடைசியில் சில கவிகளில் ஆசான் பாதத்தைப் பற்றித்தான் இந்தத் துறைக்கு வர வேண்டுமென்று சொல்லியிருப்பார்கள்.

ஆனால் அவன் அதை பார்க்க மாட்டான். மூலிகைகளில் மகிமை உள்ளதாக எண்ணிக் கொண்டிருப்பான். ஆனாலும் அது உண்மைதான். இருந்தாலும் கடைசியில் ஆசான் பாதத்தை பற்று என்று சொல்லியிருக்கிறேன் என்பார்.

சில மூடர்கள் அதைப் பார்க்காமல், மூலிகையைப் பற்றி படிப்பார்கள். என் மீது குற்றமில்லை. இதற்கு நான் காரணமல்ல. நான் ஆசான் பாதத்தை பற்ற சொல்லி நல்லதைத்தான் சொல்லியிருக்கிறேன் என்பார்.

**ஆரப்பா யெனைப்போலே திறந்துசொல்வார்**
**ஆச்சரிய மிதனுடைய வேகமப்பா**
**ஓரப்பா யிதனாலே யோகசித்தி**
**உத்தமனே சிவபூசை பண்ணநன்று**

யோகம் என்பது மூச்சுக்காற்று வசப்படுதல். இதற்கு பிராணாயாமம் என்று பெயர். சுக்கிலம் மணியாவது யோகசித்தி. அதுவே காயசித்தி. இதற்கு சிவம் என்று சொல்லப்பட்ட மேலான பூஜையை செய்ய வேண்டும்.

**சிவனே சிவஞானி யாதலாற் சுத்த**
**சிவனே எனஅடி சேரவல் லார்க்கு**
**நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்**
**பவமான தின்றிப் பரலோக மாமே.**

**– திருமந்திரம் – சிவகுரு தரிசனம் – கவி எண் 1580.**

எங்கெல்லாம் ஞானி இருக்கிறாரோ, அங்கெல்லாம் சிவபெருமான் இருக்கிறார் என்று உணர வேண்டும். ஞானிகளின் பாதத்தைப் பற்றி பூஜை செய்தாலே சிவபூஜை செய்கிறான் என்று அர்த்தம். எங்கெல்லாம் ஞானி இருக்கிறாரோ, அங்கெல்லாம் சிவபூஜை வளர வேண்டும். ஞானிகளைப் பற்றி பூஜை செய்வதே சிவபூஜையாகும். இப்படி விளக்கம் சொல்லும்போது, நாத்திக கருத்து போன்று தெரியும். ஆனால் இது சுத்த ஆத்திக கருத்து ஆகும்.

**காரப்பா யிதுதனக்குப் பூசைசெய்துக்**
**கருவாக அர்ச்சனைசெய் பதங்கஞ்செய்யே.**

ஓரிரு இடங்களில் உண்மைப் பொருளை சொல்லிவிட்டு, ஆசான் அகத்தீசரும் மகான் இராமதேவரைப் போல் பரிபாஷையில் சொல்கிறார். மகான் இராமதேவர் பூரணமாக மறைப்பார். ஆசான் அகத்தீசரும் சிலவற்றில் மறைக்கிறார்.

**செய்யப்பா யிப்படியே பூசைகொண்டு**
**திறமாகச் செய்யவல்லோ பலத்தைக்கேளு**
**மெய்யப்பா அவனுடைய பிதுர்க்களெல்லாம்**

**மிகக்கோடி நரஜென்ம மல்லவல்ல**
**பொய்யப்பா சொல்லவில்லை தேர்ந்துபாரு**
**புலத்தியனே உன்றனக்குக் கருவைச்சொன்னேன்**
**வையப்பா பூசையிலே யென்னைவைத்து**
**மவுனமாய்ச் சிவனைவைத்து நோக்குநீயே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 8.**

சிவஞானியாகிய ஞானிகளின் பாதத்தைப் பற்றி பூஜை செய்தால், அவனுக்கு மட்டும் பிறவிப்பிணி நீங்காது, அவனுடைய பிதுர்க்களுக்கெல்லாம் நீங்கும். பிதுர் என்று சொல்லியதால் இவன் தோன்றியது தந்தையின் சுக்கிலத்தால், மகன் சுக்கிலமே பேரனாகவும் இருக்கிறது. இப்படி பல கோடி ஜென்மங்களுக்கு முன்பிருந்து இவனுடைய மூதாதிகள் சுக்கிலம் வருகிறது. தந்தையின் சுக்கிலம் மாயைக்கு காரணமாக இருந்து காமத்தை உண்டாக்கியது. மகனுக்கும் அதே சுக்கிலம் வந்ததும், காமத்தை உண்டாக்கியது.

காமத்தை உண்டாக்கக் கூடிய, தீமையை உண்டாக்கக் கூடிய சுக்கிலத்தை ஞானிகளின் துணையைக் கொண்டு, நன்மையை உண்டாக்கக் கூடிய சுக்கிலத்தைப் பெற்றதனாலே, இதற்கு முன்னே பல ஜென்மங்களாக தந்தை வழியும், தாய் வழியும் வந்தவர்களெல்லாம் ஞானம் பெறுவார்கள்.

அவனுடைய தந்தை இந்த சுக்கிலத்தால் அழிந்தான், சுக்கிலத்தை கட்ட முடியாமல் இறந்தான். பல கோடி ஜென்மங்கள் இவன் எடுத்தபோது, அந்தந்த ஜென்மங்களில் இவனுக்கு தந்தையாக வந்தவர்கள் அத்தனைபேரும் இறந்துவிட்டார்கள். ஆனால் இவனுக்கு உண்மைப் பொருள் தெரிந்ததாலே, அந்த சுக்கிலத்தை வசப்படுத்தி ஞானியானான். அதன் காரணமாக வழிவழி வந்த சுக்கிலத்திற்கு யார் காரணம் என்பதை அறிந்து அந்த மூதாதையர்களுக்கும் சேர்த்து இவன் பாடுபடுகிறான்.

**செய்யப்பா யிப்படியே பூசைகொண்டு**
**திறமாகச் செய்யவல்லோ பலத்தைக்கேளு**

இந்த பூஜையினுடைய பலத்தை, ஆற்றலைக் கேளு என்கிறார்.

**மெய்யப்பா அவனுடைய பிதுர்க்களெல்லாம்**
**மிகக்கோடி நரஜென்ம மல்லவல்ல**

ஒருவன் சித்தி பெற்றால், முன்னே இவன் எடுத்து வந்த பல ஜென்மங்களில் இவனுடைய தந்தைதாய் வழி மூதாதையர்கள் அனைவரும் ஞானியாவார்கள். நரஜென்மம் அல்ல என்பதால், அத்தனை பேரும் தேவனாவார்கள். ஒரு மனிதன் சித்தி பெற்றால், அவனுடைய பிதுர்கள், தாய் தந்தையாக வந்த மூதாதையர்கள் அத்தனை பேருக்கும் ஞானவாழ்வு உண்டு என்கிறார்.

பூஜை என்பது இரண்டு வகை உண்டு. ஒன்று உலக மக்களுக்காக மகான் வியாசமகரிஷி வகுத்திருக்கிறார். எல்லோரும் இந்தத் துறைக்கு வருவதற்கு வாய்ப்பில்லை, புண்ணியவான்கள் மட்டும்தான் வரமுடியும். இந்தத் துறையில் எவன் காமத்தை வென்றானோ? அவன்தான் புண்ணியவான். காமத்தை வென்றவனுடைய பாதத்தை பற்றுவதுதான் பூஜை என்கிறார். இதுதான் இலகுவான பூஜை என்கிறார். மற்ற பூஜைகளால் பயனில்லை. உண்மைப் பொருள் உணர்ந்தவர்களுடைய பாதத்தைப் பற்றுவதே ஞானிகள் வகுத்த பூஜை ஆகும்.

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 6.**

பொறிவாயில் ஐந்தவித்தான் என்றால், இதற்கு முன்னே இருந்தது என்று அர்த்தம். பொறிபுலன் வழியாக மனம் சென்றது. அவன் அதை வென்றுவிட்டான். பொறிபுலன் வழியாக செல்லாமல், அதை வென்றுவிட்டான். அப்படியென்றால் வேகத்தை, வெப்பத்தை குறைத்துவிட்டான் என்று அர்த்தம்.

பொறிபுலனை அடக்கினால்தான் **பொய்தீர்** என்கிறார். எது பொய்? எது மெய்? என்பதை அறிந்து, பொய்யை தீர்த்துவிட்டான்.

**ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்** – பொய்யை தீர்த்தால் மட்டும் போதாது, பொறிபுலனை அடக்கினால் மட்டும் போதாது, நெறியில் உறுதியாக நிற்க வேண்டும். அப்படி நின்றால் **நீடு வாழ்வார்** என்கிறார்.

பொறிபுலனை அடக்கியவன், பொய்யை வென்றவன், பொய்யை நீக்கியவன் எதை கடைப்பிடித்தானோ, அதை நீயும் கடைப்பிடித்து உறுதியாக நின்றால், நீடு வாழ்வார் என்கிறார். இது ஆசான் திருவள்ளுவர் வகுத்துக் காட்டிய பாதை. ஆசான் திருவள்ளுவர் எதை கடைப்பிடித்து உறுதியாக நின்றாரோ, அதையே நீயும் கடைப்பிடித்து உறுதியாக நின்றால் நீடு வாழ்வார் என்கிறார்.

**பொறிவாயில் ஐந்தவித்தான்** – பொறிபுலன்கள் வழியே மனம் செல்லாது அடக்கினான். அவித்தான் என்றால் அடக்கினான் என்று அர்த்தம். **பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர்** – பொறிபுலனை அடக்கினால் மட்டும் போதாது, பொய் எது? மெய் எது? என்பதை அறிந்து பொய்யாகிய புறஉடம்பை நீக்கினான்.

**பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்** – அவர் எதை கடைப்பிடித்து அந்த நிலையை அடைந்தாரோ, அதை உறுதியாக கடைப்பிடித்து அந்த நெறியில் நிற்க வேண்டும். இதுதான் உண்மையான பூஜை. இப்படி உறுதியாக நின்றால், நீடு வாழலாம். இதுவே ஆசான் திருவள்ளுவர் வகுத்த உண்மையான பூஜாவிதி.

**மெய்யப்பா அவனுடைய பிதுர்க்களெல்லாம் மிகக்கோடி நரஜென்ம மல்லவல்ல** – உண்மையில்லாத ஒன்றை உண்மையென்று மயங்குகின்ற மயக்கம்தான், நரர்களுடைய வேலை. மாடி மேல் மாடி கட்டுவான், நாளைக்கு என்ன நடக்கும் என்பது அவனுக்கு தெரியாது. மனைவி மக்களோடு இல்லறத்தில் இருப்பான். இவர்கள் அனைவரும், அவரவர்கள் வினை வழியே வந்தவர்கள் என்பதை எண்ண மாட்டார்கள். தான் காப்பாற்றுவதாக ஒரு வகையான பிரம்மையில் இருப்பார்கள். உண்மைப் பொருள் அறியாதவர்களே நரர்கள்.

இவன் பொறிபுலனை வென்றவன் பாதத்தைப் பற்றி பூஜை செய்து கொண்டே இருப்பான். வித்தியாசமே தெரியாது. ஆனால் இவர்கள் இதே போன்றுதான் இருப்பார்கள். பொருளை திரட்டுவான், மனைவிமக்களோடு வாழ்வான், வீடு கட்டுவான், பிள்ளைகளை காப்பாற்றுவான், இப்படி எல்லாம் செய்து கொண்டிருப்பான். இல்லறத்தான் போன்றே இருப்பான். அவர்கள் போலவே இல்லறம் நடத்துவார்கள். ஆனால் இவனும் அவனும் ஒன்று போலவே தெரிவார்கள்.

உண்மைப் பொருள் அறிந்தவர்களுடைய பாதத்தைப் பற்றி, பூஜை செய்தால், இவனும் ஞானியாவான். இவன் எடுத்த பலகோடி பிறவிகளில் இவனுடைய மூதாதையர்கள் அத்தனைபேரும், இவனால் ஞானியாவார்கள்.

**பிதுர்க்களெல்லாம் மிகக்கோடி நரஜென்ம மல்லவல்ல** – அல்ல என்று சொல்லாமல் அல்லஅல்ல என்று சொல்கிறார்.

**பொய்யப்பா சொல்லவில்லை தேர்ந்துபாரு புலத்தியனே உன்றனக்குக் கருவைச்சொன்னேன்** – நான் பொய் சொல்லவில்லை, உண்மையைத்தான் சொல்லியிருக்கிறேன். இந்த பூஜையை ஒருவன் அறிந்து செய்தால் அவனுடைய வம்சம் விருத்தியாகும்.

**வையப்பா பூசையிலே யென்னைவைத்து மவுனமாய்ச் சிவனைவைத்து நோக்குநீயே** – மணியடித்துக் கொண்டு பூஜை செய்து கொண்டிருக்காதே, என்னையே பூஜை செய் என்கிறார். ஏனென்றால் நீ அறியமுடியாததை நான் அறிந்தவன், நீ செய்ய முடியாததை நான் செய்தவன், நீ வெல்ல முடியாததை நான் வென்றவன். இந்தத் துறையில் மற்றவர்கள் அணுகமுடியாத ஒன்றை நான் அணுகியவன். ஆகையால் என்னையே நீ பூஜையில் வை என்கிறார்.

தெட்சணாமூர்த்தி என்று சொல்லப்பட்ட ஆசான் அகத்தீசர் என்னையே நீ பூஜையில் வை என்கிறார். ஏனென்றால் இந்த பூஜையால் நீ மட்டுமல்ல, உன்னுடைய வம்சமும் விருத்தியாகும். உன்னுடைய முன்னோர்களுக்கும் ஞானவாழ்க்கை உண்டு. ஆகவே என்னையே பூஜையில் வை என்று சொன்ன வார்த்தை இருக்கிறது அல்லவா, அதுதான் **பொறிவாயில் ஐந்தவித்தான்** என்பதாகும்.

**அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறஆழி நீந்தல் அரிது.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 8.**

**கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 9.**

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 5.**

**இருள்சேர் இருவினையும் சேரா –** இருள் என்பது அறியாமை. இதையே மகான் இராமலிங்க சுவாமிகள் சொல்வார்,

**இருளான மலம்அறுத் திகபரங் கண்டே**
**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ**
**மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்**
**வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்**
**தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே**
**சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்**
**அருளானவீதியில் ஆடச்செய் தீரே**
**அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – கவி எண் 495.**

மலம் என்றால் இருள் என்று அர்த்தம். பசிக்கு உணவு கொடுத்தால் அது மாயையை உண்டாக்கும். பசியை வெல்லாமல் மலத்தை நீக்க முடியாது. வெல்ல முடியாத மும்மலத்தை வென்றதனாலே, **இகபரங் கண்டேன்** என்கிறார். இகம் என்பது உலகம். பரம் என்பது ஞானம், மேலான வார்த்தை. மலத்தை அறுத்தாலன்றி இகத்திலிருந்து பரவாழ்க்கை வராது. அவன் இங்கேதான் இகத்தில் இருந்து கொண்டிருக்கிறான், ஆனால் பரவாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறான். பரவாழ்க்கை என்பது மேலான வாழ்க்கை.

**இருளான மலம்அறுத் திகபரங் கண்டே எல்லா உயிர்களும் இன்புற்று வாழ –** ஒரு மனிதன் சித்தி பெற்றால், அவனுடைய மூதாதையர்கள், முன்னூறுகோடி பிதுர்க்களெல்லாம் சித்தி பெறுவார்கள், உலக உயிர்களெல்லாம் இன்புற்று வாழும். ஒரு மனிதன் சித்தி பெற்றால் இவ்வளவு வாய்ப்பு இருக்கிறது. பொறிபுலனை வென்றவன் பாதத்தைப் பற்றியதால் இந்த வாய்ப்பு வந்தது.

**மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம் வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போக –** இந்தத் துறையில் மனிதன் கடவுளாகலாம். அவனுடைய பாதத்தைப் பற்றுகின்ற மக்களுக்கு எல்லா நன்மைகளும் செய்வான் என்ற

உணர்வுகள் எவனுக்கு வருகிறதோ, அந்த உணர்வால் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும். அவ்வளவு ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் தோன்றி மடிகிறார்கள். அவனால் இந்த உலகத்திற்கு நன்மை கிடையாது. அவனுடைய மனைவி மக்களுக்கு நன்மை செய்து விட்டு போவான். ஆனால் இனம், மதம் கடந்து எல்லா உயிர்களுக்கு அருள் செய்யக் கூடிய ஆற்றல், மும்மலம் என்று சொல்லப்பட்ட தீய சக்தியை வென்றவனுக்குத்தான் உண்டு. இந்த புனிதமான துறையை அறிய முடியாத மார்க்கங்களெல்லாம் மண் மூடி போகட்டும் என்று சாபமிடுகின்றார்.

**மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம் வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போக** – மண் மூடி போகட்டும் என்பது, அழிந்து போகட்டும், மண்ணிலே புதைந்து போகட்டும் என்கிறார்.

**தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே**
**சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்**
**அருளானவீதியில் ஆடச்செய் தீரே**
**அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.**

உண்மையான இந்தத் தத்துவம் உலகம் முழுவதும் பரவ வேண்டும். பொய் சொல்லுகின்ற தத்துவங்களெல்லாம் மண் மூடி போக வேண்டுமென்று நூறாண்டுகளுக்கு முன்னரே சொல்லிவிட்டார். மருள் என்ற தெளிவில்லாத மார்க்கங்களெல்லாம் வழித்துறை தெரியாமல் மண் மூடி போகட்டும், இவைகளெல்லாம் அழிந்து போகட்டும் என்கிறார்.

**தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்** – தெருள் என்றால் தெளிவான என்று அர்த்தம். தெளிவான சுத்த சன்மார்க்கம் உலகமெங்கும் செழிக்கட்டும் என்று மிகப்பெரிய அருள் வாக்கு தந்திருக்கிறார். கண்மூடித்தனமான கொள்கையை பரப்பக்கூடிய மார்க்கங்களெல்லாம் அழிந்து போகட்டும் என்கிறார். உண்மை சன்மார்க்க சங்கம் உலகமெலாம் வளரட்டும் என்று வரம் கொடுத்திருக்கிறார்.

**இருள்சேர் இருவினையும் சேரா** – இருள் என்பது மும்மலம்தான். அதன் காரணமாகத்தான் உண்மைப்பொருள் தெரியாத ஒரு திரை உண்டாகிறது, அது இருட்டாக இருக்கிறது. உண்மைப்பொருள் அறிய முடியாத காரணத்தினால்தான் ஒருவனுக்கு நல்வினை தீவினை வருகிறது.

**இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** – இறைவன் யார் என்று கேட்டால், எவன் பொறிபுலனை வென்றானோ, எவன் மும்மலத்தை வென்றானோ, அவன்தான் இறைவன் என்று சொல்லப்பட்ட தகுதியை பெறுகிறான்.

பொருள் என்று சொல்லப்பட்ட உண்மைப் பொருளை உணர்ந்து, எவன் சித்தி பெற்றானோ, அவன் பாதத்தை அன்புடன் பூஜிப்பதே புரிதல் என்று பொருள்படும். இது ஆசான் திருவள்ளுவர் வகுத்த மிகப்பெரிய தத்துவம்.

ஆசான் அகத்தீசர் யாரும் அறிய முடியாத தத்துவத்தை அறிந்தவர். ஆகையால் தெட்சணாமூர்த்தி என்று சொல்லப்பட்ட ஆசான் அகத்தீசர் தன்னை வணங்கு என்று சொல்கிறார். மிகவும் கருணை கொண்டு தன்னை வைத்து பூஜை செய் என்கிறார். ஆசான் அகத்தீசர், தன்னை பூஜை செய்தால் உனக்கு மட்டுமல்ல உன்னுடைய வம்சத்திற்கே விருத்தியாகும் என்கிறார். அதுமட்டுமல்ல உலகத்திற்கே நன்மை உண்டாகும் என்று இந்த தத்துவத்தைப் பற்றி கூறுகிறார்.

**நீயென்றும் நானென்றும் வேறுமில்லை**
**நிராகாரம் போலவுந்த னுக்குத்தோணும்**
**நாயென்றும் சென்மத்தால் தாண்டியேத்தும்**
**நற்சென்ம மல்லவப்பா சித்தன்சித்தன்**
**பாயென்றார் கூடுவிட்டுக் கூடுகொள்ளும்**
**பதறாம லிருந்துகொள்ளக் கெவுனம்சாடும்**
**நோயென்ற வறுமையெல்லா மகன்றுபோகும்**
**நுண்ணிமையாய்ச் சிவலிங்க போதந்தானே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 9.**

இந்தத் துறையில் வருகின்றவர்கள் அத்தனைபேருக்கும் எல்லா மொழிகளும் தெரியும். எல்லா மக்களுடைய குணநலன்களும் கலாச்சாரமும் தெரியும். எவ்வளவு வேற்றுமை இருந்தாலும், அவர்கள் மீது அன்பு செலுத்தினால் நீ வேறு நான் வேறு அல்ல என்பார். அன்பு செலுத்தும்போது, உலகோர் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற உணர்வுதான் மேலோங்கி இருக்கும். அப்படி அன்பு செலுத்தினால் நீ வேறு நான் வேறு அல்ல என்கிறார்.

ஆசான் அகத்தீசரை பூஜை செய்யசெய்ய, சிறிதும் வித்தியாசம் இல்லாமல், வேற்றுமையில்லாமல் நீயும் நானும் ஒன்று என்பார். தென்மண்டல தளபதியும் தெட்சணாமூர்த்தியாகிய ஆசான் அகத்தீசர் மிகவும் கருணை கொண்டு இப்படி உங்களுக்கு சொல்லியிருக்கிறேன் என்கிறார்.

**நீயென்றும் நானென்றும் வேறுமில்லை**
**நிராகாரம் போலவுந்த னுக்குத்தோணும்**
**நாயென்றும் சென்மத்தால் தாண்டியேத்தும்**
**நற்சென்ம மல்லவப்பா சித்தன்சித்தன்**

என்னை நீ பூஜை செய்தாயானால், உனக்கு எல்லா சக்தியும் கைகூடும். அதுமட்டுமல்ல நீயும் நானும் வேறில்லை. நிராகாரம் என்றால் தெளிவாக தெரியும். பூஜை செய்ய செய்ய எல்லா தத்துவங்களும், எல்லா வேதங்களும்,

சாஸ்திரங்களும், ஆகமங்களும் ஞானிகள் அருளிய நூல்களை தொட்டாலே தெரியும், படிக்க வேண்டியதில்லை. ரெட்டை மாட்டு வண்டி போன்று நானூறு வண்டி பாரமுள்ள நூலை தொட்டவுடனே, அதிலுள்ள நூல்களை ஒரு விநாடியில் படிப்பார்கள் என்றால், அவர்களுக்கு எவ்வளவு பெரிய ஆற்றல் இருக்க வேண்டும்.

**நாயென்றும் சென்மத்தால் தாண்டியேத்தும்** – காமம் என்பது சின்ன விஷயமல்ல. தாழ்ந்தோராக இருந்தாலும் உயர்ந்தோராக இருந்தாலும் காமம் ஒருவனை கீழே தள்ளிவிடும். வெளியே எப்படி வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருப்பான், ஆனால் காமம் உள்ளே அவனை வஞ்சித்துக் கொண்டே இருக்கும். அவனுடைய அந்தரங்கம் மிகக் கொடுமையானதாக இருக்கும். அதனால்தான் நாய் ஜென்மம் என்கிறார். அந்தளவிற்கு இழிவான வார்த்தையை மனிதன் வாங்குவதற்கு காரணம் காமம். இதிலிருந்தும் மீள முடியும் என்கிறார்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 5.**

**நற்சென்ம மல்லவப்பா சித்தன்சித்தன்** – நல்ல ஜென்மமும் பிறவிக்கு காரணமாகும். நல்வினையின் காரணமாகவும் பிறவி வரும். இது தீய ஜென்மமுமல்ல, நல்ல ஜென்மமுமல்ல, பிறப்பு இறப்பற்ற நிலை வரும்.

**பாயென்றார் கூடுவிட்டுக் கூடுகொள்ளும்** – இந்த கூட்டில் நாளொன்றுக்கு சுவாசம் 21,600 முறை வந்து போகும். கூடுவிட்டு போகின்ற காற்றை, புருவமையம் என்று சொல்லப்பட்ட கூட்டிற்குள் செலுத்துவான். இந்த கூட்டிற்குள் இருந்து புருவமத்தி என்ற கூட்டிற்குள் செலுத்துவான். கூடுவிட்டு கூடு பாய்கின்ற இரகசியம் இதுதான்.

**பதறாம லிருந்துகொள்ளக் கெவுனம்சாடும்** – வாசி வசப்பட்டு பத்து பதினைந்து வருடமாகலாம். ஆனாலும் பதறாமல் இருந்து வந்தால் நல்லது. கூடுவிட்டு கூடு பாய்ந்தால் மட்டும் போதாது, அவசரப்படாமல் பொறுமையாக இருக்க வேண்டும். அப்படி அவசரப்பட்டால் பாடுபட்டதெல்லாம் வீணாகப் போய்விடும்.

உப்பில்லாமல் சாப்பிட்டு இரவும் பகலுமாய் கண் விழித்து தவம் செய்திருப்பான். பலவகையான துன்பத்திற்கு ஆட்பட்டிருப்பான். ஆனால் அமிழ்த பானம் சிந்தவில்லையென்று மறுபடியும் புருவமத்திக்குள் நுழையக் கூடாது. கோவிலிற்கு போய்விட்டு வந்தவுடன் காலை கழுவக்கூடாது என்பார்கள். காலை கழுவக்கூடாது என்று சொன்னதன் அர்த்தம், கால் இயங்கக்கூடாது என்று அர்த்தம். வீட்டிற்குள்ளே நுழையும்போது காலை கழுவலாம், கோயிலிற்கு போய்விட்டு வந்தவுடன் காலை கழுவக்கூடாது என்பார்கள்.

கோயில் என்று சொல்லப்பட்ட புருவமத்திக்குள் நுழைந்துவிட்டால், மறுபடியும் காலை கழுவக்கூடாது என்று சொன்னதன் அர்த்தம், கால் என்று சொல்லப்பட்ட மூச்சுக்காற்றை இயக்கக் கூடாது. இவ்வளவு பெரிய விஷயத்தை, சாதாரணமாக சொல்லியிருக்கிறார்.

கோயிலிற்குள் நுழையும் முன்பு காலை கழுவிவிட்டு போக வேண்டும் என்பதற்கு அர்த்தம் என்னவென்றால், கால் என்று சொல்லப்பட்ட சுவாசத்தை சுத்தப்படுத்திவிட்டு போக வேண்டும் என்பதாகும். மூச்சுக்காற்றிற்கு கால் என்ற பொருளுண்டு. புருவமத்திக்கு உள்ளே சென்றுவிடுவான், திருப்பி வந்தால் மறுபடியும் காலை கழுவக்கூடாது என்பதற்கு, கால் என்று சொல்லப்பட்ட மூச்சுக்காற்றை இயக்கக் கூடாது என்று அர்த்தம். அவ்வளவு பெரிய இரகசியத்தை அவ்வளவு இலகுவாக சொல்லியிருக்கிறார். இப்படி கோயிலிற்கு போய்விட்டு வந்தால் காலை கழுவக்கூடாது என்று ரொம்ப இலகுவாக சொல்லியிருக்கிறார். இப்படி சொன்னதாலே கையை வைத்து கழுவாமல், ஒரு காலை கொண்டு அடுத்தக் காலை தேய்த்து கழுவுவான். அந்தக் கால் சுத்தமாவதற்கு இந்தக் கால் உதவும். இந்தக் கால் சுத்தமாவதற்கு அந்தக் கால் உதவும். கால் இயங்கக் கூடாது என்பதை இரகசியமாக சொல்லியிருக்கிறார்.

கூடுவிட்டு கூடு பாயும் மக்கள், மறுபடி அந்த இடத்திற்கு போகமாட்டார்கள். அமிழ்தபானம் வருவதற்கு பன்னிரண்டு வருடம் ஆகும். பூட்டினால் அந்தக் கதவை திறக்கக் கூடாது. பத்து பன்னிரண்டு வருடம் ஆகிறதே என்று அவசரப்பட்டு மறுபடியும் காற்றை ரேசித்தால், எல்லா சித்தர்களும் ஒதுங்கிக் கொள்வார்கள். அவ்வளவுதான் மோன வாழ்க்கையை விட்டுவிட்டான் என்று அவனை அப்படியே விட்டுவிட்டு போய்விடுவார்கள். சரி இவனுக்கு அவ்வளவுதான் அமைப்பு. இவன் அடங்கிய வாசியை வெளியே விட்டுவிட்டான். இனி இவன் ஆறு மாதத்தில் நோய் வந்து இறந்துபோவான்.

அவன் இதுநாள் வரை செய்து வந்த பூஜையால், மறுபடியும் பிறக்கும்போது இயல்பாகவே நல்லுணர்வு உள்ள குழந்தையாக பிறந்து, யோகிகளுக்குரிய சாஸ்திர சம்பிரதாயத்தில் தெளிவைப் பெறுவான். நல்ல ஆசான் அமைந்து, அவன் மீண்டும் பூஜை செய்து முன்னேறுவான். அவனை கைவிடவே மாட்டார்கள். புண்ணியவானை பூஜை செய்தான், அதனால் ஆசான் அவனை கைதூக்கி விடுவார்.

**போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்**
**போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்**
**நாதன் நடத்தால் நயனங் களிகூர**
**வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 142.**

**போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியை –** அறிவு வடிவாக இருக்கின்ற, அறிவுக்கடலாக இருக்கின்ற, தீட்சண்யமான அறிவை பெற்றிருக்கின்ற, நுட்பமான அறிவை பெற்றிருக்கின்ற ஆசான் அகத்தீசரையும், மகான் நந்தீசரையும், மகான் திருமூலதேவரையும் வணங்க வேண்டும். இப்படி வணங்கி வந்தால் அவர்களிடம் இருக்கின்ற அறிவு அப்படியே இவனிடம் பிரதிபலிக்கும்.

**போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப் போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார் –** சிந்திக்க சிந்திக்க சிந்திக்க அறிவு மிளிரும், அறிவு மிளிர மிளிர புண்ணியவானாவான்.

**நாதன் நடத்தால் நயனங் களிகூர –** வாசிவசப்பட்டால் நாததொனி கேட்கும். தசநாதம் கேட்பதைதான் நாதம் என்பார்கள்.

**நாதன் நடத்தால் நயனங் களிகூர –** நயனம் என்பது கண். கண்ணுக்குள்ளே பிரகாசமான ஜோதி தோன்றும். முதலில் நாதம் என்று சொல்லப்பட்ட தசநாதம் கேட்கும். அதன் பிறகு ஜோதி தோன்றும்.

**வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே –** ஞானிகளின் பாதத்தைப் பற்றியதால், எல்லா வேதங்களும் போற்றுகின்ற அளவிற்கு அவன் உயர்ந்த நிலையைப் பெற்றான்.

பொறிபுலனை வென்றவன், இருவினை அற்றவன், உண்மைப் பொருளை உணர்ந்தவன், எண்குணத்தான் என்றும், கோளில் பொறியிற் குணமிலவே என்றும் மகான் திருவள்ளுவர் பல்வேறு வகையாக ஆசான் பெருமைகளை கூறுகிறார். மனிதன் தெய்வமாகலாம் என்கிற தத்துவத்தை மகான் திருவள்ளுவப்பெருமான் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ள பத்து குறளில் சொல்லியிருக்கிறார். இறைவனைப் பற்றி எல்லோரும் அறிய முடியும் என்றாலும், யோகிகளுக்கு மட்டும் புலப்படக்கூடிய இரகசியம் இந்த அதிகாரத்தில் இருக்கும்.

**பாயென்றார் கூடுவிட்டுக் கூடுகொள்ளும் பதறாம லிருந்துகொள்ளக் கெவுனம்சாடும் –** பதறாமல் இருக்க வேண்டும். கொஞ்சம் கூட பதற்றம் இல்லாமல் இருக்க வேண்டும். இந்தத் துறையில் பதற்றம் என்கிற பேச்சுக்கே இடமில்லை. சிறிது கூட பதற்றம் இருக்கக் கூடாது. பதற்றம் இருந்தால் வாழ்க்கை வீணாகப் போய்விடும். அனைத்து ஞானிகளும் இவனை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காலதாமதம் ஆகிறதே, அமிழ்த பானம் சிந்தவில்லையே என்று இரண்டு நிமிஷம் ஏமாந்து, வாசியை ஸ்தம்பித்து மறுபடியும் புருவமத்தியில் செலுத்திவிட்டால் அவ்வளவுதான் இவ்வளவு காலம் பாடுபட்டதெல்லாம் வீணாகப் போய்விடும். ஆகவே பேசாமல் பொறுமையாக பல காலம் இருக்க வேண்டும்.

பல காலம் அமைதியாக இருந்து, எடுத்த பிறவியை செம்மையாக முடித்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கை வீணாகப் போகும். இப்படியெல்லாம் ஆசான் அகத்தீசர் சொல்லியிருப்பதை தெளிவுபடுத்தி, இந்த தத்துவத்தை நாங்கள் உங்களுக்கு சொல்ல வேண்டும்.

உண்மைப் பொருள் உணர்ந்த ஆசானை பூஜை செய்யுங்கள். நீ வணங்கும் ஆசான் உண்மைப் பொருள் உணர்ந்தவராக இருந்தால் மட்டும் போதாது. அதை கையகப்படுத்தியவராக இருக்க வேண்டும். அவர்தான் யோகி, அவர்தான் ஞானி, அவர்தான் கடவுள். அவருடைய பாதத்தைத்தான் பற்ற வேண்டும். இதுதான் உங்களுக்கு வாழ்க்கையில் வெற்றியைத் தரும் என்று நாங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

தலைவனை அறிமுகப்படுத்தாமல் வாசியை இப்படி இழுங்கள் அப்படி இழுங்கள், வாசியை கட்டுங்கள், இடது பக்கம் மூச்சை இழுத்து வலது பக்கம் விடுங்கள் என்று சொல்லிக் கொடுக்கக் கூடாது. இது சமுதாயத்தை வஞ்சிக்கக் கூடிய செயலாகும்.

யோகநெறியைப் பற்றி தெரிந்தால் பேச வேண்டும். இல்லையென்றால் பேசாமல் இருக்க வேண்டும். இப்படி இல்லாது ஒன்று கிடக்க ஒன்று பேசினால், அந்த பேச்சை நம்பி செயல்பட்டு வெகுபேர் கிராணி வந்து இறந்திருக்கிறார்கள்.

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக்**
**கபாலமும் திறந்தனர் கோடி**
**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகிக்**
**கலங்கினோர் அவர்ஒரு கோடி**
**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பிச்**
**சொக்கினோர் அவர்ஒரு கோடி**
**சூலை வாய்வு அணுகிச் சுவாலையும் எழும்பிச்**
**சுரமதால் இறந்தவர் கோடி**
**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி**
**உள்ளடங் கிணர்களுங் கோடி**
**உயர சாண்நீள முழுவதும் எழும்பி**
**ஓங்கியே ஒடுங்கினோர் கோடி**
**பேண அதிசாரப் பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாப்**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

**– புலஸ்தியர் கற்பம் 300ல் 97.**

**நோயென்ற வறுமையெல்லா மகன்றுபோகும்**
**நுண்ணிமையாய்ச் சிவலிங்க போதந்தானே**

சில நூல்களைப் படித்துவிட்டு தான் எல்லாவற்றையும் கற்றுவிட்டதாக எண்ணி, தன்னை நம்பி வருகின்றவர்களுக்கு சொல்லிக் கொடுத்து, அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டு நோய் வந்து இறந்து போவார்கள். இதனால் சொல்லிக் கொடுத்தவனுக்கு பாவம் சூழும். இப்படியெல்லாம் பாவத்திற்கு ஆட்படக்கூடாது என்று நாங்கள் நயமாக சொல்லிக் கொண்டு வருகிறோம்.

முதலில் பக்தி நெறியைப் போதிக்க வேண்டும். பக்திநெறியைப் போதிக்கும் ஆற்றல் இல்லையென்றால், ஆசான் அகத்தீசர் எழுதிய நூல்களைப் படித்து தெளிவைப் பெற வேண்டும். தெளிவைப் பெற்றுத்தான் பிறருக்கு சொல்லித் தர வேண்டும். இல்லையென்றால் உன்னுடைய வாழ்க்கையும் வீணாகப் போகும், கேட்பவர்களுடைய வாழ்க்கையும் வீணாகப் போகும்.

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்.**

**– திருக்குறள் – தவம் – குறள் எண் 265.**

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 2.**

விரும்பிய பயனையெல்லாம் அடையலாம் என்று மகான் திருவள்ளுவர் சொல்கிறார். வாலறிவன் என்று மகான் திருவள்ளுவர் அறிமுகப்படுத்துகிறார்.

தூய அறிவு வடிவானவனை அறிமுகப்படுத்துகிறேன். அவரை அறவாழி அந்தணன் என்று மகான் திருவள்ளுவர் சொல்கிறார். கருணையே வடிவானவனும், மும்மலத்தை வென்றவனும், உண்மைப் பொருள் தெரிந்தவனுமாகிய ஒருவனை பூஜித்தால், மகான் திருவள்ளுவர் சொன்னது போல, வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், விரும்பிய பயனை அடையலாம் என்கிறார். அதுமட்டுமல்ல நோய், வறுமையெல்லாம் அகன்று போகும். அவனுக்கு நோய் இருக்காது. வறுமை என்கிற நோய் இருக்காது, தொட்டதெல்லாம் துலங்கும், சொன்னதெல்லாம் பலிக்கும். அவன் எதை விரும்புகிறானோ அதை செய்து தர வேண்டும் என்கிற உணர்வு மகான்களுக்கு உண்டு.

ஆசான் அகத்தீசர் பாதத்தை பற்றுகின்ற மக்களுக்கு உதவி செய்தால், உதவி செய்த மக்கள் காலால் இடுகின்ற வேலையை தலையால் செய்வோம் என்கிறார். ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றி பூஜை செய்த மக்களுக்கு உணவு உடை கொடுத்தால், அந்த உணவு உடை கொடுக்கின்றவனின் பாதரட்சையை தூக்கி தலையில் வைத்துக் கொள்வேன் என்பார். இப்படி யோகிக்கு தேவையான உதவி செய்கின்ற மக்களுடைய பாதரட்சையை எடுத்துக் கொண்டு அவனுடைய வீட்டிற்கு கொண்டு போய் கொடுப்போம்.

நான் அரூபமாக இருக்கிறேன், நீ ரூபமாக இருக்கிறாய். என் பிள்ளைக்கு நீ உதவி செய்கிறாய். உனக்கு செய்ய வேண்டிய கடமை எனக்கு உண்டு என்கிறார். யோகிகளுக்கு உதவி செய்தவர்களுக்கு தலையாலே சுமந்து வந்து கொடுப்பேன் என்று சொல்கிறார். அந்த அளவிற்கு கருணை காட்டுவார்.

இவ்வளவு கனிவான சிந்தை எப்படி வந்தது? அந்த தூய அறிவால் வந்தது என்கிறார். உயிர்களிடத்து உள்ள கருணையால் வந்தது. ஆகவே கருணையே தவம். கருணை வடிவான மக்கள் எதையும் செய்வார்கள். அவர்கள் பாதத்தைப் பற்றி பூஜை செய்தால்தான், பொல்லாத வறுமை நீங்கும். நாளை என்ன ஆகுமோ, தொட்டது தடைபடுமோ என்ற ஏக்கம் இருக்காது. அவர்கள் அதை முடித்தே விடுவார்கள், விரும்பியதெல்லாம் கைகூடும்.

இல்லறத்தானுக்கு அவனுடைய ஆற்றலுக்கு உட்பட்ட காரியத்தை மட்டுமே செய்ய முடியும். அவனுடைய ஆற்றலுக்கு உட்பட்ட காரியத்தை செய்யும்போதே தடை வரும், தோல்வி அடைவான். அதனால் பலருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவான்.

எல்லாம் செய்யக் கூடிய வல்லவன் பாதத்தைப் பற்றியதாலே இவன் ஆற்றலைப் பெற்றான். தனது ஆற்றலுக்கு மீறிய ஒரு காரியத்தை இவன் செய்ய முயற்சிப்பான், வெற்றி பெறுவான். இவனுக்கு நோய், வறுமையெல்லாம் நீங்கிவிடும்.

**எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே**
**எல்லாம்வல் லான்தனையே ஏத்து.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – கவி எண் 1.**

**இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்**
**றென்றுவரு மோஅறியேன் எங்கோவே – துன்றுமல**
**வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து**
**சும்மா இருக்கும் சுகம்.**

**– திருஅருட்பா முதல் திருமுறை – கவி எண் 1.**

சும்மா இருக்கக் கூடிய இரகசியத்தை அறிந்த மக்கள்தான் இப்படி தெளிவாக பேச முடியும்.

**எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே** – மாபெரும் யோகி ஆசான் சுப்பிரமணியரை நான் வணங்கினேன். நான் வணங்கிய காரணத்தாலே, எல்லாம் செயல் கூடும் என்று சொன்னேன். என் மீது ஆணையிட்டு சமுதாயத்திற்கு இதை சொல்கிறேன் என்கிறார். என் மீது உனக்கு உண்மையான நம்பிக்கை இருக்குமேயானால், நான் சொல்வதை நீ நம்ப வேண்டும் என்பதற்காக என் மீதே சத்தியமிட்டு சொல்கிறேன்.

**எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே**
**எல்லாம்வல் லான்தனையே ஏத்து.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – கவி எண் 1.**

மனிதனுக்கு எத்தனையோ ஆற்றல் இருக்கலாம். போர் பயிற்சி பெற்று ஆற்றல் உள்ள வீரனாக இருக்கலாம், விஞ்ஞானியாக இருக்கலாம், இன்னும் இதுபோன்று எவ்வளவோ ஆற்றல் இருக்கலாம். ஆனாலும் மரணத்திலிருந்து விடுபட முடியாது. மரணத்திலிருந்து விடுபட முடியாததினாலே, எல்லாம் செய்யக் கூடிய வல்லவன் கடவுள், அவர்தான் ஞானி.

விசயம் தெரிந்தவன் கடவுளுக்கு மனித ரூபத்தை கொடுத்திருக்கிறான். எந்த கடவுளாவது மிருக தோற்றத்தில் இருப்பாரா என்றால், இல்லை. மனிதன் போன்றுதான் இருப்பார். மனிதன் கடவுளாக இருக்கிறான் என்பதை விசயம் தெரிந்தவன் அறிமுகப்படுத்துகிறான்.

**எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே**
**எல்லாம்வல் லான்தனையே ஏத்து.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – கவி எண் 1.**

எல்லா வல்லமைகளும் உடையவன் யார் என்றால், அவன்தான் மனிதன். மனிதன்தான் கடவுளாகிறான், அவனை ஏற்றி போற்றுங்கள் என்று மகான் இராமலிங்கசுவாமிகள் சொன்னார். இவ்வளவு பேரும் இதைத்தான் பேசியிருக்கிறார்கள். மகான் திருவள்ளுவர் முதல் மகான் இராமலிங்கசுவாமிகள் வரை இதைத்தான் பேசியிருக்கிறார்கள். நோய் என்ற வறுமை உனக்கு இருக்க முடியாது, தொட்டதெல்லாம் துலங்கும்.

**தானென்ற குளிகைசெப மாலைசெய்து**
**தாக்கப்பா பதினாறு நடுத்தானொன்று**
**மானென்ற மதியாளை வட்டஞ்செய்ய**
**மகம்மேரு போலவுமே வொளியுங்காணும்**
**கோனென்ற அவள்ரூபஞ் சொல்லப்போகா**
**கோடிரவி ரூபமவள் சொல்லக்கேளு**
**தேனென்ற மனோமணியாள் சிவனுமங்கே**
**சிந்தித்த போதமெல்லாந் தெளியுந்தானே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 10.**

**தானென்ற குளிகைசெப மாலைசெய்து**
**தாக்கப்பா பதினாறு நடுத்தானொன்று**

தான்தான் ஜெபமாலை என்பதை அறிய வேண்டும். தான்தான் ஜெபமாலை. குளிகை என்பது மணி. தான் தன்னையே மணியாக்கிக் கொள்ள வேண்டும். **பதினாறு நடுத்தானொன்று –** இடது கலையாகிய சந்திரகலை பதினாறு, நடுத்தான் என்றால் புருவமத்தி என்று அர்த்தம்.

**மானென்ற மதியாளை வட்டஞ்செய்ய** – மதி என்பது உடம்பு. உடம்பாலே வட்டம் செய்ய வேண்டும்.

நாங்கள் இவ்வளவு கருத்துகளை உங்களுக்கு சொன்னதே மிகப்பெரிய விஷயம். இப்படித்தான் சொல்ல வேண்டும், வேறு வழியில்லை.

தென்மண்டல தளபதி தெட்சணாமூர்த்தியாகிய ஆசான் அகத்தீசர் அருளிய ஞான பூஜாவிதி 10ல் உள்ள பாடல்களை பார்த்தோம். உனக்கேத்த பிள்ளையானால் இந்த உயர்ந்த கருத்துக்களை சொல் என்றும், ஒருவன் ஆசான் அகத்தீசரை பூஜை செய்து சித்தி பெற்றால் அவனுடைய பல கோடி ஜென்மங்களின் பிதுர்க்களெல்லாம் ஞானியாவார்கள் என்றும், சில கருத்துகளை பாடல்களில் பரிபாஷையாக மறைத்து வைத்திருந்தாலும் ஆசான் பாதத்தை பற்றினால்தான் அவைகளையெல்லாம் அறிய முடியும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள்,
தினசரி, மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்
கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**
**ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம்,**
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.
✆ 04327–255184, செல்: 90950 33311

மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

ஓங்காரக்குடிலாசானிடம் தீட்சை பெற விரும்புகிறவர்கள்
தொடர்புக்கு : **ந.நடராஜன்,**
கொள்கை பரப்பாளர், செல்: 98947 55784

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு
**R.சுரேஷ்** – 94434 21935

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆனி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, ஆனி மாதம் 31ஆம் தேதி,**

**16.07.2019 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆடி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, ஆடி மாதம் 30ஆம் தேதி,**

**15.08.2019 - வியாழக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.



சென்னை, திரு. சௌந்தரராஜன் (Agri) அவர்கள் ஓங்காரக்குடிலாசானின் அருளால் பெற்ற அனுபவங்கள் குறித்து. . .

அன்புள்ள ஞானத்திருவடி வாசகர்களுக்கு வணக்கம்.

புண்ணியத்தைக் கொண்டு புண்ணியத்தை செய்ய வேண்டுமென்று நமக்கு அருளிய ஓங்காரக்குடிலாசான், சிவராஜயோகி, முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் அவர்களின் திருவடிகளை பணிந்து வணங்குகிறேன்.

நான் கடந்த பத்தாண்டுகளாக ஓங்காரக்குடிலுக்கு வந்து செல்லுகிறேன். சித்தர்களின் பெருமைகளை பேசும் ஞானத்திருவடி என்னும் நூல் ஓங்காரக்குடிலிலிருந்து மாதந்தோறும் வெளிவருகிறது. அந்த நூல் நம் வீட்டில் இருந்தால் ஞானிகளின் திருவடி நம் வீட்டில் இருப்பதாக அர்த்தம், சித்தர்களைப் பற்றியும், சித்தர்கள் அருளிய கவிகளுக்கு உண்மை விளக்கத்தை அறியவும் ஞானத்திருவடி நூலை வாங்கி வாசித்து பயன் பெறுங்கள். சித்தர்கள் போற்றித் தொகுப்பு என்னும் சிறிய புத்தகத்தை ஒவ்வொருவரும் அவருடைய கைப்பையில் அவசியம் வைத்திருக்க வேண்டும். எப்பொழுதும் நம்முடன் சித்தர்கள் போற்றித் தொகுப்பு நூல் இருந்தால் நமக்கு காப்பாக இருக்கும். இது எங்களது அனுபவம். இந்த கலியுகத்தில் வீட்டை விட்டு வெளியே சென்று வீட்டிற்கு வருவதற்குள் நமக்கு கண்டிப்பாக பாதுகாப்பு வேண்டும். அதுவும் சித்தர்கள் காப்புதான் நமக்கு பெருந்துணையாக இருக்கும். நாம் பெற்ற பொருளை பிறருக்கு பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அன்னதானம் செய்ய வேண்டும், ஞானத்திருவடி நூலின் பெருமைகளை எடுத்துச் சொல்லி பிறரையும் படிக்க வைக்க வேண்டும், சைவ உணவை மேற்கொள்ள வேண்டும், உயிர்பலி இடும் கோவில்களுக்கு செல்வதை தவிர்த்து விடுதல் நல்லது. மாதம் ஒரு முறையேனும் ஓங்காரக்குடிலுக்கு வந்து குருநாதரை தரிசனம் செய்து அவரது ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அன்னதானம் செய்தால் புண்ணியம் பெருகும், பூஜையும் செய்ய முடியும். ஞானிகள் பூஜையே நம்மை கடைத்தேற்றும். இவ்வுலக துன்பங்களிலிருந்து விடுபட அன்னதானமே ஒரே வழி. ஆகவே ஞானிகள் திருவடி பற்றி அன்னதானம் செய்து ஞானிகளை வணங்கி சைவத்தை கடைப்பிடித்து ஆசி பெறுவோம். நன்றி.

குருநாதர் திருவடி பணிந்து,
திரு. சௌந்தரராஜன், (Agri)
சென்னை.

# மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed., திருச்சி. செல் : 99655 71837

**12.06.2019**

1. காப்பாய் நிற்கின்றேன் அரங்கா
கருணை கொண்டு உன்னுள்ளே
ஒப்புக் கொண்டு மகா சூட்சும
உயர் சக்தியாக உள்ளேன் தேசிகா

2. தேசிகா உந்தனுக்கு விகாரி விடை திங்கள்
திடம் பெற அறிவுரை ஆசி தன்னை
நேசம்பட சுப்பிரமணியர் உரைப்பேன்
ஞானி உன் தேகம் யான் விரும்பி

3. விரும்பி ஆட்கொண்ட தேகமப்பா
வேலுண்டு உன் செயலுக்கு துணையாய்
கரும்பின் இனிப்பை போல
கந்தன் உன்னுள் கலந்துள்ளேன்

4. உள்ளபடி உன்னை வெல்ல
உலகில் வேறு ஞானி இல்லையப்பா
வள்ளலின் சக்தியை மிஞ்சும்
வல்லமையான அமுது படைத்து

5. படைத்து கலியுக தருமனாக
பார் போற்றும் தவசி ஆனாய் நீ
தடையில்லை உன் சேவை வளர
தக்க பொருள் வளம் வருகச் செய்வேன்

6. செய்வேன் பாவ வழி சேர்த்தவனும்
சேவையென உன்னை அடைந்து
அய்யமிலா தரும வழி உதவினால்
அறம் வழி தொடர்ந்து வந்தால்

7. வந்தவன் அரசன் அதிகார வர்க்கமாயினும்
வருமுலகில் அவனுக்கும் அருளி
சிந்தை தெளிவு ஊட்டி உன் வழி
சித்தி பெற வாய்ப்பு தருவேன்

8. தருவேன் தயவில் துணை வர
தருவேன் உன் தருமம் வளர்த்திட
தருவேன் உமக்கு சகல பலமும்
தவபூர்த்தியாக விகாரியில் உன் வழி

9. உன் வழி அற்புதம் நிகழ்த்துவேன்
உண்மை சரணடைவு கண்டவர்களை
நன்மை அடையச் செய்வதுடன்
ஞானியாகவும் ஆக்கி அருள் புரிவேன்

10. அருள்மிக்க கலியுக ஞானி நீ
அழைப்பவர் உன்னை என்றாலும்
அருள் தருவேன் ஆறுமுகன் அணுகி
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூலின் சாரம் :

உலக மாற்றம் நிகழ்த்த வந்த எமது அவதாரமே அரங்கமகா தேசிகனே உம்மை எமது அவதாரமாக ஒப்புக்கொண்டு பெரும் கருணையுடன் உம்முள்ளே மகா சக்தியாக நின்று உம்மை காத்து வருகின்றேனப்பா அரங்கமகா தேசிகனே.

அரங்கமகா தேசிகனே உமக்கு விகாரி வருடம் வைகாசி திங்கள் தன்னிலே உறுதியுடன் அறிவுரை ஆசி தன்னை அன்புடன் சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியர்.

உத்தம மகா ஞானியே அரங்கமகா தேசிகனே உமது தேகமானது முருகப்பெருமான் யான் விரும்பி ஏற்றுக் கொண்ட ஞானதேகமாகும். எமது வேற்படை உமது செயல்பாடுகளுக்கு எப்பொழுதும் துணையாக உள்ளதப்பா. ஜோதி சொரூபனான கந்தன் யான் கரும்பில் இனிப்பு கலந்துள்ளது போல, உம்முள் இரண்டற கலந்துள்ளேனப்பா. உம்மை வென்று வெற்றி கொள்ள இவ்வுலகினில் உம்மைப்போல வேறு ஞானிகள் யாரும் இல்லையப்பா. உமது சக்திக்கு நிகராய் இவ்வுலகினில் வேறு சக்தி இல்லையப்பா.

வள்ளல் பெருமான் ராமலிங்க சுவாமிகளின் தர்மசக்தியை மிஞ்சும் அளவிற்கு வல்லமையான வகையில் அன்னதானத்தினை வலிமையாகச் செய்து கலியுகத்தின் ஒப்பற்ற தர்மத்தலைவனாக உலகமே வியந்து போற்றும் மகா தவசியாக ஆகிவிட்டாயப்பா அரங்கா நீயும். உமது அறச்சேவை வளர எந்தவித தடையும் இல்லையப்பா. அதற்கு தேவையான பொருளாதாரத்தினை முருகன் யானே உமக்கு பெருகிடச் செய்வேனப்பா.

பாவங்களை செய்து பொருள் சேர்த்தவனும் மனம் மாறி சேவைகள் செய்திட வேண்டி உத்தம மகா ஞானி உம்மை அணுகி உமது தர்மம் வளர்ந்திட சந்தேகமின்றி உம்மை முழுமனதாய் நம்பிக்கையுடன் குருவாய் ஏற்றுக் கொண்டு உமது தருமவழி தொடர்ந்து பொருளுதவிகளைச் செய்து உமது தருமத்தினை வளர்த்திட்டால் அவன் அரசனாய் இருந்தாலும் சரி, அதிகார வர்க்கமாயினும் சரி, வருங்காலங்களில் அவனுக்கும் அருள் செய்து சிந்தையில் தெளிவு உண்டாக்கி உமது வழியில் வரச் செய்து அவரையும் சித்தி பெற வாய்ப்புகளை தருவேனப்பா.

அப்பனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது தயவிற்கு துணையாய் நிற்பேனப்பா. உமது தருமம் வளர்ந்திட ஏராளமாய் பொருளைத் தருவேனப்பா. விகாரி ஆண்டிலே தவத்தினை பூர்த்தி செய்து சகல பலங்களையும் தந்தருளுவேன் முருகப்பெருமான் யானுமே.

இந்த விகாரி ஆண்டினிலே அரங்கா உமது மூலமாக பல அற்புதங்களை நிகழ்த்துவேன், உம் திருவடியை உண்மையுடன் சரணாகதி அடைந்தவர்களை நன்மைகள் பல அடைந்திட செய்வதுடன் அவர்களை ஞானம் வழி செலுத்தி ஞானியாகவும் ஆகிட அருள் புரிவேனப்பா.

அருள்மிக்க கலியுக ஞானி அரங்கா நீயுமே, உம்மை மக்கள் அரங்கா என்று மனம் உருகி அழைத்திட்டாலும், அரங்கா உமது நாமம் கூறி அழைத்தவர்களுக்கு ஆறுமுகன் யான் அவர்களை அணுகி அருள் செய்கின்றேனப்பா எனக் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–

**புருவத்திடையே பொருந்தும் இருகலைதான்**
**பருவத்தே செய்திட பாழ்படும் மூவாசை!**

**மொழிகுவார் வள்ளுவனை மும்மூர்த்தியென்றே**
**அழிவில்லா வாழ்வு அவன் அருள்வானே!**

**அங்கியின் அளவறிந்து அதனுடன் பழகில்**
**தங்கிவிடும் உடல் உயிர்தான்!**

**தகவல் தொடர்பை சாதகமாக்கிய**
**பகவன் முருகன் பதத்தைப் போற்றுவோம்!**

**அல்லல்படும் ஏழைகளுக்கு ஆறுமுகன் தானும்**
**நல்லதொரு ஆட்சியை நல்குவான் நலமே!**

**– மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.**

# மகான் விசுவாமித்திரர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed., திருச்சி. செல் : 99655 71837

12.06.2019, புதன்கிழமை

1. **யோகசித்தே அரங்கா போற்றி**
   **யோகிகளை வணங்க வகை செய்து**
   **யுகமாற்றம் செய்ய வந்தநல்**
   **உயர் ஞானியே உன் பெருமை கூறி**

2. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
   குறையிலா **விகாரி விடை திங்கள்**
   **தெரியவே இருபான் நவதிகதி புந்தி வாரம்**
   **(விகாரி வருடம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2019, புதன்கிழமை)**
   **தேசிகனுக்கு விசுவாமித்திரர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உலகமெங்கும் அரங்கன் காட்டும்
   ஞானவழிகளை ஏற்று மக்கள் வர
   நன்மை தரும் சூழல் மிகுதி ஆகும்

4. ஆகவே எங்கும் மக்களிடை
   அமைதியும் மன பக்குவமும்
   மிகைபட தயை சிந்தையும்
   மேல் நோக்கும் எண்ணங்களும் வளரும்

5. வளரவே மக்களை நோக்கி
   வருக வருக என அழைத்து
   தளராத மனோபலம் தருமபலம்
   தயை சிந்தை பெருகும்படி அருளி

6. அருளி ஆசி தீட்சை தந்து
   அறம் வழி வாரீர் வாரீர் என
   அருளும் அரங்கன் சபைக்கு
   ஆறுமுகனார் பிரணவ குடிலுக்கு

7. குடிலுக்கு உலகோர் வருகவே
   குறைவின்றி எல்லா வளமும்
   தேடிட சர்வபலமும் பெற்று
   தேசிகனார் அருளால் தேறுவர்

8. தேறவே அரங்கன் காட்டும்
திருவருள் ஞான வழிகளே
மாறுதலை செய்ய வல்ல
மார்க்கமாக இருந்து வருக

9. வருகவே அரங்க ஞானியின்
வழிகாட்டல் ஏற்று உலகில்
முருகா என முழங்கி வருகின்ற
மொழிகுவேன் அரங்கன் சீடர்களை

10. சீடர்களை ஆதரித்து உலகோர்
செப்பிட வழிமொழிந்து வர
தடைகளின்றி பொருளுதவி
தக்க தொண்டுகளும் செய்து

11. செய்து சீடர்களாகி வருக
சேவை தொடர பெருமாற்றமாக
மெய்ஞான உலகமாக மாறும்
மொழிந்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லாது யோகங்கள் செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி, யோகிகளை மக்களெல்லாம் வணங்கி ஆசி பெற்றிட, வழிவகை செய்து இவ்வுலகினில் யுகமாற்றத்தை செய்திட வந்திட்ட யுகமாற்ற அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2019, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே விசுவாமித்திரர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் விசுவாமித்திரர்.

உலகினில் உள்ள மக்களெல்லாம் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் உண்மை ஞானநெறிகளை ஏற்றுக் கொண்டு மக்கள் கடைப்பிடித்து வர, உலகினில் நன்மையே உண்டாகக் கூடிய சூழ்நிலைகளை உண்டாக்கும். உலகமெங்கும் மக்களிடையே அமைதியும் மனப்பக்குவமும் தயைசிந்தையும் அதிகமாகி மேன்மையான எண்ணங்களும் வளர்ந்து ஓங்கும்.

இவ்விதமே உலகினில் நன்மைகள் எல்லாம் விரைந்து நடந்திட, உலக மக்களை நோக்கி அழைப்பு விடுக்கின்ற உயர் ஞானி உலக மக்கள் ஞானம்

பெற வாருங்கள் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருக வருக என தாயன்போடு அழைத்து அவர்களுக்கு தளராத மனோபலத்தினையும் தருமபலத்தையும் தந்து தயைசிந்தை பெருகும்படி, அவர்களுக்கு அருள் செய்து அவர்களுக்கு தீட்சை உபதேசங்களை அருளி ஆசிகளை அருளி அறத்தின் வழியிலே மக்கள் விரைந்து வாரீர் வாரீர் என அருள் செய்து அழைக்கும் அரங்கப்பெருமானின் அருள் ஞானசபைக்கு முருகப்பெருமானின் ஓங்காரக்குடிலிற்கு உலக மக்கள் வந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளைப் பெற்று குறைவின்றி எல்லா வளமும் சர்வபலமும் பெற்று தேசிகனாரின் அருட்கருணையால் ஜென்மத்தைக் கடைத்தேற்றுவார்கள்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற இறையருள் மிக்க தூய ஞான வழிகளே உலகினில் மாற்றங்களை செய்கின்ற வல்லமைமிக்க சக்தியுடைய உயர் ஞான மார்க்கமாகும். ஆதலினாலே உலக மக்களே சர்வசக்திமிக்க ஆறுமுக அரங்கரின் தூயநெறி மார்க்கங்களை ஏற்றுக் கொண்டு பின்பற்றுங்கள்.

அரங்கரின் கட்டளைகளை ஏற்று முருகா, முருகா, முருகா என ஜெபங்களுடன் முழங்கிக் கொண்டு வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களை உலக மக்கள் ஆதரித்து வழிமொழிந்து ஏற்றுக் கொண்டு அரங்கன் மேற்கொள்ளும் தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து அரங்கரைச் சார்ந்து உலகோரும் தொண்டுகளைச் செய்து அரங்கரின் சீடர்களாக ஆகிட வேண்டும். இவ்விதமே தொடர்ந்து செயல்பட செயல்பட உலகினில் பெரும் மாற்றங்கள் உருவாகி உலகமே மெய்ஞ்ஞான உலகமாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் விசுவாமித்திரர்.

–சுபம்–

ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

# மகான் அப்பூதியடிகள் நாயனார் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed., திருச்சி. செல் : 99655 71837

18.06.2019, செவ்வாய்க்கிழமை

1. **கோளிடர்களையும் விரட்டியே**
   **குறையிலா வாழ்வு நலம் அருள**
   **அழியாமை ஞான உபதேசமுடன்**
   **ஆறுமுகன் அவதாரமாக வந்த ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் **விகாரி மிதுன திங்கள்**
   **இனிமைபட சூலதிகதி குசன் வாரம்**
   **(விகாரி வருடம் ஆனி மாதம் 3ம் நாள் 18.06.2019, செவ்வாய்க்கிழமை)**
   **இயம்பிடுவேன் நித்ய பிரசன்ன ஆசியை**

3. ஆசியை அப்பூதி அடிகள் யானும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   ஆசிபட அரங்கமகா ஞானியை
   அணுகியே கலியுக மக்கள் அனைவரும்

4. அனைவரும் ஆசி தீட்சை அடைந்து
   அன்னதான நெறியை ஏற்று
   அனைவரும் வணங்கி வருதலுற
   அகிலமே பெருமாற்றம் காணும்

5. காணவே தயவை பெருக்கும்
   கனிவான தருமநெறியை
   ஞானவான் குமரகிரி நாடி
   ஞாலமதில் பொருளுதவி செய்து

6. செய்துமே தொண்டர்களும் ஆகி
   செயல்பாடாக உலகம் எங்கும்
   அய்யமற அரங்கன் கொள்கையை
   ஆற்றல்பட பரப்பி வருதலுற

7. வருகவே கலிகால தீவினைகள்
   வலுவிழந்து ஒழிந்து நன்கு
   முருகா எனும் செபதபம் பெருக
   முழுமைபட அமைதிமிக்க யுகமாகும்

8. ஆகவே மக்களிடை நற்பண்பும்
அறிவு முதிர்ச்சி ஞானத்தெளிவும்
பகைமை குணங்கள் அணுகாத
பரோபகார நிலையும் பாதுகாப்பும்

9. காப்பான செயல்களே வளரும்
கலிமீட்பின் குரு அரங்கனை
ஒப்பு கொண்டு வருதல் காண
உயர் திருவடி தீட்சை அடைய

10. அடையவே இந்த அற்புதங்களும்
அளவிலாத பெருமாற்றங்களும்
தடையற நடந்தேறி உலகமும்
தனிப்பெருங்கருணை மிக்க யுகமாக

11. ஆகவே அரங்கஞான ஆசிபட
ஆறுமுகன் தலைமை ஏற்று மாறும்
வகைபட வளமே காணும்
வழங்கிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

**மகான் அப்பூதி அடிகள் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மக்களுக்கு உண்டான கிரகதோஷங்களினால் வருகின்ற துன்பங்களை போக்கி குறையற்ற வகையில் நலம்மிக்க வாழ்வினை அருளி அழிவிலாமை எனும் ஞானஉபதேசத்துடன் மக்களை வழிநடத்தி ஞானகுருவாகி முருகப்பெருமானின் அவதாரமாகி இவ்வுலகினில் வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் ஆனி மாதம் 3ம் நாள் 18.06.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே அப்பூதியடிகள் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அப்பூதி அடிகள்.

உத்தம மகா ஞானி யுகமாற்றத் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை உலக மக்கள் எல்லாம் பயபக்தியுடன் பணிந்து வணங்கி அண்ணல் அரங்கரிடத்து தீட்சை உபதேசங்களையும் அருளாசிகளையும் பெற்று அரங்கன் நடத்தும் தூயநெறியாம் அன்னதான நெறியினை அவரவரும் ஏற்று ஞானிகளை வணங்கி செயல்பட உலகமே பெருமாற்றம்தனை காணுமப்பா.

உலகம் பெருமாற்றம் அடைய வேண்டுமாயின் தயவினை பெருக்கும் தருமநெறியை ஏற்று உலகின் மாற்றத்திற்காகவே முருகப்பெருமானால் அமைக்கப்பட்ட துறையூர் குமரகிரியை நாடிச் சென்று ஆங்கே நடக்கின்ற தானதரும பணிகளுக்கு பொருளுதவிகளைச் செய்து அரங்கரின் தொண்டர்களாக ஆகி உலகமெங்கும் பரவி உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனின் அற்புதமான கொள்கைகளை பரப்பி வர வேண்டும். உலகமெங்கும் அரங்கனின் தூய ஞானக் கொள்கைகள் பரவபரவ கலிகாலத்தின் தீயவினைகள் எல்லாம் வலுவிழந்து உலகை விட்டே ஒழிந்து விடும்.

உலகோர் ஞானத்தலைவன் முருகப்பெருமானையும் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனையும் தலைவனாக ஏற்றுக் கொண்டு முருகா, முருகா, முருகா என்றே மனம் உருகி ஜெபதபங்களை பெருக்கி வர, உலகினில் முருகப்பெருமானின் அருள் பெருகி முழுமையான அமைதிமிக்க ஞானயுகமாக இவ்வுலகம் மாறிடும். உலக மக்களிடையே நற்பண்புகள் பெருகிடும். மக்களுக்கு அறிவு முதிர்ச்சி உண்டாகி ஞானத்தெளிவையும் அடைந்து பகைமையான குணங்கள் ஏதும் அணுகாத வகையில் நன்மக்களாக ஆகி பரோபகார நிலை பெருகி நிலையான அருள் பாதுகாப்பும் பெருகிடும் நற்செயல்களே உலகினில் வளரும்.

கலியுக மீட்பின் ஞானகுரு ஆறுமுக அரங்கனை குருவாக ஏற்றுக் கொண்டு அரங்கரிடத்து உயர்வான திருவடி தீட்சை உபதேசங்களை பெற்று வருகின்றவர்களுக்கு அற்புதங்கள் உருவாகும். அவர்களுக்குள் உள்ள தீமையானவைகள் எல்லாம் விலகி அளவிலாத பெருமாற்றங்களை அடைவர். உலக மக்களுக்கு எல்லா நன்மைகளும் பெருகி உலகமே ஞானஉலகமாக ஞானயுகமாக மாறிடும். தனிப்பெருங் கருணைமிக்க யுகமாக மாறி முருகப்பெருமானின் தலைமையில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசியுடன் இவ்வுலகம் முழுதும் வளம்மிக்க உலகமாக மாற்றம் பெறும் எனக் கூறுகிறார் மகான் அப்பூதி அடிகள் நாயனார்.

–சுபம்–

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**
## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 60 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ.200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ.200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

## அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

...................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

# தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

**உயிர் இரக்கமே இறைவழிபாடு....**

**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

No.72A – 100 அடி ரோடு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828. ✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்
## அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

துரியமும் கடந்ததோர் பெரியவான் பொருளென
உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச்சத்தே
அன்றதன் அப்பால் அதன்பரத்து அதுதான்
என்றிட நிறைந்த என்தனிச் சத்தே
என்றும் உள்ளதுவாய் எங்கும்ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே
சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே
தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே 1220

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

## கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

## இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

காலை 6.00 முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு
ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்
தியானம் (நாமஜெபம்)

காலை 7.30 பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம்.

காலை 8.00 ஓங்காரக்குடிலில் அன்னதானம்

மதியம் 1.00 ஓங்காரக்குடிலில் அன்னதானம்

**மதியம் 3.00** முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்**

மாலை 5.00 கிராம அன்னதானம்

மாலை 6.00 அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)
ஆசான் அகத்தீசர் வழிபாடு

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.


ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,
113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,
வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________ பின்கோடு ____________

வட்டம் : ____________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

### சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்